**இலங்கையில் TVET துறையில் தனியார் துறை மற்றும் பெண்கள் வலுவூட்டலுக்கான புதுமையான அணுகுமுறைகளை வெளிப்படுத்துதல் (திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட மானியம்) - 2022**

---

இலங்கையில் TVET துறையில் தனியார் துறை மற்றும் பெண்கள் வலுவூட்டலுக்கான புதுமையான அணுகுமுறைகளை வெளிப்படுத்துதலின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 11 ஆம் திகதிய 9193 எஸ்ஆர்ஜ (ஈஎவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 4.02(அ) பிரிவின் IV ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களைக் கொண்டுள்ளதுடன் செயற்திட்டத்தை நிறைவேற்றும் மற்றும் அமுல்படுத்தும் முகவர்களின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தப்படுத்தல் முகவராகவும் உள்ளது. தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி மூலம் அதிகரித்த பெண் தொழிலாளர் பங்கேற்பு மற்றும் பெண்களின் பொருளாதார வலுவூட்டலிற்கு பங்களிப்பதே செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கமாகும். செயற்திட்டமானது (i) தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியில் தனியார் துறை ஈடுபாட்டை வலுப்படுத்துதல், (ii) பெண்களை முன்னிறுத்தி சுயதொழிலிற்கான தொழில்முனைவோர் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை முன்னேற்றுதல், (iii) பாரம்பரியமற்ற பகுதிகளிற்கு பெண்களை கவர்வதற்கு பெண்களை இலக்காக கொண்ட ஊக்குவிப்புக்களை வழங்குதல், வழிகாட்டுதல் மற்றும் வேலையில் பயிற்சியை வழங்குதல், (iv) தனியார் துறையில் பாலினம் - உள்ளடங்கிய ஆட்சேர்ப்பு மற்றும் பணிச்சூழல் நடைமுறைகளை வெளிப்படுத்துதல் (v) திறன் துறையில் கொவிட்-19 தாக்கத்திற்கு திறமையான பதிலை வழங்குதல ஆகிய பெயர்களிலான 5 கூறுகளை கொண்டுள்ளது. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 534 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 3 மில்லியனாகக் காணப்பட்டதுடன் வறுமை குறைப்பிற்கான யப்பான் நிதியத்தால் (JFPR) மானியமொன்றாக நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் செயற்திட்ட நிதியிடல் நோக்கங்களிற்காக ADB ஆல் இது நிர்வகிக்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2018 நவம்பர் 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் 2023 யூன் 30 வரை இரு தடவை நீடிக்கப்பட்டது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து ரூபா 469.96 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 280.14 மில்லியன் தொகை மாத்திரமே காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ள நிதி நடவடிக்கைகள் மற்றும் காசு மற்றும் காசிற்கு சமமானவற்றின் இறுதி மீதி என்பன அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 189.69 | (i) | மீளாய்வாண்டில் ரூபா 469.84 மில்லியனில் செயற்திட்டம் ரூபா 280.14 மில்லியனை மாத்திரம் மீளப்பெற்றிருந்தது. இதனை காசுப்பாய்ச்சல் கூற்று காட்டுகிறது. ரூபா 189.69 மில்லியன் மிகுதி தொகை CBSL கணக்குடன் உள்ளது. எனினும் நிதி நிலைமைக் கூற்று மற்றும் குறிப்பு இலக்கம் 7 இல் மொத்தத் தொகை காட்டப்பட்டுள்ளது. | நன்கொடை முகவரிடமிருந்து பெறப்பட்ட மொத்தத் தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி நடவடிக்கையின் கீழ் காட்டப்பட வேண்டும். |
| | | | (ii) | காசுப்பாய்ச்சல் கூற்றில் CBSL மீதியைக் காட்டினால், ஒரு வாய்ப்பு உள்ளது என்பதைக் அவதானிக்கவும், ரூபா 238.27 மில்லியனை (ரூபா 189.69 + ரூபா 48.56) கணக்கில் இயல்பாக வைப்பதுடன் அந்த தொகை மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட தொகையை விட (ரூபா 219.14 மில்லியன்) அதிகமாகும். | |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | ரூபா 103 மில்லியன், ரூபா 24.50 மில்லியன் மற்றும் ரூபா 78.07 மில்லியன் தொகையான முறையே செயற்திட்டச் செலவினங்கள், வியாபார மற்றும் செலுத்த வேண்டியவை மற்றும் நிதி நடவடிக்கைகளின் திரண்ட தொகை 2021 ஆம் ஆண்டின் காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் காட்டப்படுவதற்குப் பதிலாக ஒப்பீட்டு புள்ளிவிவரங்களாகக் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | 98.62 | 2022 ஆம் ஆண்டில் காசுப்பாய்ச்சல் ஒப்பீட்டு புள்ளிவிவரங்கள் (2021) ஆனது 2021 இன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றிலிருந்து பெறப்பட்டது. | காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் விசேட (டொலர்) கணக்கில் ரூபா 129,545 செலாவணி நட்டப் பெறுமதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் பங்களிப்பில் இருந்து செலவினமாக தனித்தனியாக அடையாளம் காணப்படாமல் நிதிக்கூற்றுக்களில் கழிக்கப்பட்டிருந்தது. நிதி அறிக்கைகள். இதன் விளைவாக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் மொத்த பங்களிப்பானது அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | 0.13 | நாணயமாற்று ஆதாயம்/ நட்டத்தை மாற்ற கணக்கீடு செய்வதற்கு தனியான பாதீட்டுக் குறியீடு எதுவும் காணப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில், நாணயமாற்று ஆதாயம்/ நட்டங்களை செயற்திட்டச் செலவினம்/ வருமானமாகக் கணக்கீடு செய்தால், அது செயற்திட்ட நோக்கங்களை தவறாக வழிநடாத்தும். | ADB பங்களிப்பின் ரூபா பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் சரியாக பிரதிபலிக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட நடவடிக்கைகள் 5 கூறுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றதுடன் பௌதீக செயன்முன்னேற்றம் பின்வருமாறுள்ளது.

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (1) | **<u>வெளியீடு 01</u>**<br>உடன்படிக்கையில் உள்ளடங்கிய விரிவான கிரய மதிப்பீட்டின் பிரகாரம் 5 உப செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு ஆரம்பத்தில் ஐ.அ.டொலர் 464,000 வெளியீடு 01 இன் கீழ் ஒதுக்கப்பட்டிருந்தது. பின்னர், இது முதலாவது மற்றும் இரண்டாவது கால நீடிப்பின் போது 69% ஆல் ஐ.அ.டொலர் 140,728 வரை குறைக்கப்பட்டிருந்தது. எனினும், அதில் 26% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 7.35 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 35,900 மாத்திரமே 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) | உப செயற்பாடு 1.4.2 இன் கீழ், TVET பட்டதாரிகளின் (குறிப்பாக பெண்கள்) வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கு, தொடக்கத்தில் 12 உப செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு, கைத்தொழில் சபை மற்றும் திறன் மன்றத்திற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதே குறிக்கோளாக உள்ள போதிலும் ரூபா 242,074 பெறுமதியான 01 உப செயற்திட்டம் உட்பட அத்தகைய 3 உப செயற்திட்டங்கள் மாத்திரமே 2022 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், வடிவமைப்பு மற்றும் கண்காணிப்பு கட்டமைப்பின் பிரகாரம் குறைந்தபட்சம் ஒரு கைத்தொழில் சபைக்கு வழக்கமான வருமான மூலம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து தொழில்துறை திறன் சபைகளை (ISSCs) வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் ஒவ்வொரு சபைக்குமான உப செயற்திட்டங்களை தொடங்குவதற்கு முன்மொழியப்பட்டது. மேலும் செயற்திட்டமானது ஒவ்வொரு சபைக்கும் உத்திகள் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி, முன்மொழிவுகளை உருவாக்குவதற்கு அவர்களுக்கு வழிகாட்டியிருந்தது.<br><br>உண்மையில், மூன்று சாத்தியமான உப செயற்திட்டங்கள் மாத்திரமே மூன்று ISSCs ஆல் முன்மொழியப்பட்டன. 2022 | இச் செயற்திட்டத்தின் மீதமுள்ள காலப்பகுதியினுள் இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திசெம்பர் இறுதிக்குள் மூன்று ISSCs உடன் இந்த மூன்று உப செயற்திட்டங்களை நடாத்துவதற்கான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.<br><br>ஒட்டுமொத்தமாக முழு நாடும் கொவிட் மற்றும் பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்டது, அவை ISSCs இற்கும் பாதிப்பை ஏற்படுத்தின, மேலும் அவர்களால் இணங்கப்பட்ட செயற்திட்டத்தை உரிய காலத்தில் தொடங்க முடியவில்லை.<br><br>வருமானம் ஈட்டுவதைக் காட்டுவதற்கு செயற்திட்டங்கள் சுருக்கப்பட வேண்டும். ஆனால் 2022 ஆம் ஆண்டில், வருவமானத்தை காட்டுவதற்கு ISSCs ஆல் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியவில்லை.<br><br>வருமான வளமூலத்தை அளவிடுவதற்கு, உப செயற்திட்டங்களை பூர்த்திசெய்வது அவசியமாக இருந்தது, ஆனால் 2022 இன் இறுதியில் செயற்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. | |
| (ஆ) | செயற்திட்ட வடிவமைப்பு மற்றும் கண்காணிப்பு கட்டமைப்பின் பிரகாரம் 4.1.1.1 இற்கு இணங்க 1.4.2 இன் கீழ் குறைந்தபட்சம் TVET துறையைச் சேர்ந்த 500 பெண் மாணவிகள் தனியார் துறையில் வேலை தேட வேண்டும் என தொழில்துறை சபை இலக்கை நிர்ணயித்துள்ளது. ஏற்படுத்தப்பட்ட 16 உடன்படிக்கைகளில், 10 தொழில்தருநர்கள் மாத்திரமே செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு பணவளிப்புக்களை பெற்றதுடன் நியமனக் கடிதங்களின் பிரகாரம் 10 பெண்களுக்கு மாத்திரமே அதன்மூலம் வேலை | உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்ட பதினாறு கம்பனிகள் தங்கள் உப செயற்திட்டங்களை நடாத்தி வருகின்றன, மேலும் அவை ஆண்டு இறுதியில் (2022) பெண் பதவியணியினரை வேலைக்கு அமர்த்திக் கொண்டிருந்தன. பதிவேடுகளின் பிரகாரம் 67 பதவியணியினர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். எனினும், அனைத்து கம்பனிகளும் அந்த நேரத்தில் தங்கள் உப செயற்திட்டங்களை பூர்த்தி செய்திருக்கவில்லை. மேலும், நாட்டில் நிலவும் பொருளாதார வீழ்ச்சியால் தனியார் துறையில் புதிய | செயற்திட்டத்தின் மீதமுள்ள காலப்பகுதியினுள் இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்திருந்தது. | ஆட்சேர்ப்புக்கள் கடினமாக இருந்தன. | |
| (2) | **<u>வெளியீடு 02</u>**<br>விரிவான கிரய மதிப்பீட்டின் பிரகாரம் வெளியீடு 02 இன் கீழ் பெண்கள் சுயதொழில் தொடங்குவதை இலக்காகக் கொண்ட தொழில் முனைவோர் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ஐ.அ.டொலர் 968,372 ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் குறிக்கோளை அடைந்துகொள்வதற்கு 35 உப நடவடிக்கைகள் இனங்காணப்பட்டன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன | | |
| (அ) | செயற்திட்டத்தின் இறுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை மற்றும் தாக்க ஆய்வுகள் தவிர 35 நடவடிக்கைகளில் 18 நடவடிக்கைகள் 2022 திசெம்பர் 31 வரையிலும் தொடங்கப்பட்டிருக்காதமையும் ரூபா 163,795,378 இற்கு சமமான ஐ.அ.டொலர் 541,598 தொகை அது தொடர்பாக செலுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | 35-செயற்பாட்டுப் பட்டியலானது செயற்திட்டத்தின் மொத்த செயற்பாட்டுப் பட்டியலாகும், மேலும் 2022 ஆம் ஆண்டிற்காக நாங்கள் செய்திருந்த செயற்பாடுகளின் நிதி அறிக்கைகளை மாத்திரமே நாங்கள் பகிர்ந்துள்ளோம். கடந்த ஆண்டுகளில் சில பாதீட்டு வரிசைகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டதுடன் சில பாதீட்டு நடவடிக்கைகள் செயற்திட்டத்தின் இறுதியில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. | செயற்திட்டத்தின் மீதமுள்ள காலப்பகுதியினுள் இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2.4.1 உப செயற்பாட்டின் கீழ் 5 செயற்பாடுகள் மூலம் பெண் தொழில்முனைவோருக்கு வழிகாட்டி வணிக ஆலோசனையை வழங்குவதற்கு திருத்தப்பட்ட மதிப்பீட்டில் இருந்து ஐ.அ.டொலர் 120,000 ஒதுக்கப்பட்ட போதிலும் அந்த உப செயற்பாட்டின் மூலம் எதிர்பார்க்கப்படும் எந்த் விளைவும் அடைந்து கொள்ளப்படவில்லை. | தற்போதுள்ள 70 தொழில்முனைவோர் அபிவிருத்தி பயிற்சியாளர்களுக்கு, தொழில்முனைவோருக்கான தொடர்ச்சியான வழிகாட்டல் மற்றும் வணிக ஆலோசனைகள் எந்தக் கிரய அடிப்படையும் இல்லாமல் வழங்கப்பட்டிருந்தது. எனவே, இந்த நடவடிக்கைக்கு பாதீட்டுச் செலவினம் காணப்படவில்லை. 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ADB அங்கீகாரத்துடன் அமைச்சிற்கு இணைக்கப்பட்டுள்ள 46 அதிகாரிகளுக்கு இந்த பாதீடு மேலும் 2 TOTs இற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. | அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் இனங்காணப்பட்ட உப நடவடிக்கைகளுக்கு மாத்திரமே செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 47 தொகுதிகளில், வணிகத்தை தொடங்குவதற்கான 423 மானியம் வழங்குபவர்கள் உட்பட ரூபா 59.19 மில்லியன் தொகை 32 தொகுதிகளுக்கு | | |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டுள்ளது, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2.6.1 உப நடவடிக்கையின் கீழ் வணிக விரிவாக்கலுக்கான 158 மானியம் வழங்குபவர்களை உள்ளடக்கிய 15 தொகுதிகளுக்கு ரூபா 61.58 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | | |
| (i) | உரிய செயற்திட்டக் காலத்தை தாண்டி ஒரு வருடம் கடந்திருந்த போதிலும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது மைல்கல்லாக உள்ள வணிகப் பதிவு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காதமை வணிக புள்ளிவிபரத்திற்கான 250 மானியம் பெறுபவர்களிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பொருளாதார நெருக்கடி, வட மாகாணத்தில் தேசவழமைச் சட்டம், காணி உரிமைப் பிரச்சினைகள் போன்ற காரணங்களால் வணிகப் பதிவு தாமதமாகியது. | வணிகங்களை தொடர்வதற்கு சட்ட மூலத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | வணிக விரிவாக்கத்திற்காக வழங்கப்பட்ட 90 மானியங்களின் மாதிரிக் கணக்காய்வின் போது புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான இரண்டாவது மைல்கல் உரிய மானியதாரர்களால் பூர்த்தி செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | நாட்டின் தற்போதைய பொருளாதார மந்தநிலை காரணமாக பெரும்பாலான வணிகங்கள் தொடர்ந்திருப்பதில் சவால்களை எதிர்கொள்கின்றன. இந்த சூழ்நிலையில், மேலதிக ஊழியர்களை ஆட்சேர்ப்பது வணிகத்திற்கு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். நாட்டிலுள்ள பல பெரிய கம்பனிகளும் பொருளாதார நெருக்கடியின் கீழ் தொழிலாளர்களை குறைத்துள்ளன.<br><br>எனவே புதிய ஆட்சேர்ப்பு மூலம் வணிகத்தை விரிவுபடுத்துவதை விட வணிகத்தைத் தொடர்வதிலும், வணிகத்தில் நிலைத்திருப்பதிலும் செயற்திட்டம் கவனம் செலுத்தியது. | மைல்க்கல்லை அடைந்துகொள்வது குறித்து பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 38 பாரம்பரிய வணிகத் துறைகளில் வணிகத்தை தொடங்குவதற்கு 98 ஆண் தொழில்முனைவோர் மற்றும் 325 பெண் தொழில்முனைவோருக்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டதை மானியத்தின் பகுப்பாய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதில் அதிக மானியத் தொகை அதாவது ரூபா 16.80 மில்லியன் அல்லது 28 | செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் TVET துறை பங்குதாரர்களின் ஆலோசனையுடன் செயற்திட்டத்தால் அடையாளம் காணப்பட்ட 157 மரபுசாரா துறை கற்கைநெறிகள் காணப்பட்டன. அவை ஒவ்வொருவருக்கும் சமமான வாய்ப்புக்களை வழங்கும் மேலே குறிப்பிட்ட கற்கைநெறிகளின் அடிப்படையில் அனைத்து தெரிவுகளும் மேற்கொள்ளப்பட்டன. பெரும்பாலான | புதிய தொழில்முனைவோரை கண்காணிப்பதற்கு பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீத மானியம் பெற்ற 119 பேருக்கு வீடு வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் வணிகத்திற்கும், ரூபா 10.14 மில்லியன் அல்லது 17 சதவீதம் வரைபியல் வடிவமைப்பு வணிகத்திற்கும், ரூபா 7.68 மில்லியன் அல்லது 12 சதவீதம் தாவர நாற்றுமேடை வணிகத்திற்கும் வழங்கப்பட்டது, எனினும், நெருக்கடி நிலைமை காரணமாக நாட்டில், மேற்குறிப்பிட்ட வணிகத் துறைகளில் தேவை குறைந்துள்ளமையும் வணிகத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானத்தை அடைந்துகொள்ள முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அத்தகைய சூழ்நிலையில், புதிய தொழில்முனைவோர் செயற்திட்ட காலப்பகுதிக்கு அப்பால் போட்டி சந்தையில் நிலைத்து நிற்கும் திறன் தொடர்பாக நிச்சயமற்ற நிலைமை காணப்பட்டது. இதன் விளைவாக, பெண்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையில் வேலை வாய்ப்புக்களை மேம்படுத்துதல் ஆகியவற்றின் நோக்கம் அடைந்து கொள்ளப்பட்டிருந்ததா இல்லையா என்பது சிக்கலாக இருந்தது. | TVET நிறுவனங்களில் கிடைக்கும் சில கற்கைநெறிகளுக்கு அதிக மாணவர் பங்கேற்பு இருந்தது. அதன் காரணமாக சில துறைகள் அதிக பங்களிப்பைக் கொண்டிருந்ததுடன் சேவைகளை வழங்கும் பெரும்பாலான துறைகள் தொழில்முனைவோர் அடிப்படையில் அதிக சதவீதத்தைக் கொண்டுள்ளன.<br><br>தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக அவர்களில் சிலர் குறைந்தாலும் மாற்று வருமானம் ஈட்டும் முறைகளைக் கண்டுபிடிக்க முடிந்தது.<br>உதாரணம்:<br>• வரைபியல் வடிவமைப்பாளர்கள் மற்றும் வரைவாளர்கள் Fiverr மூலம் சர்வதேச சந்தையை அடைந்தனர்.<br>• வடிவமைப்பாளர்கள் அச்சிடும் சேவைகளையும் தொடங்கினர்.<br><br>தாவர நாற்றுமேடைகள் மலர் மற்றும் அலங்கார செடிகளுக்கு பதிலாக பழங்கள் மற்றும் காய்கறி செடிகளை அறிமுகப்படுத்தியது. | |
| (iv) | பாரம்பரியமற்ற மற்றும் வளர்ந்து வரும் துறைகளுக்கு பெண்களை வழிநடாத்துவதே நோக்கமாக இருந்த போதிலும் மேற்படி ஆய்வின் பிரகாரம் நிர்மாணம், மரவேலை, மோட்டார் வாகன சேவிஸ்கள் போன்ற பெண்கள் தொடர்பில் கவனம் செலுத்தாத துறைகளுக்கு 23 பெண்கள் அல்லது 5 சதவீத மானியம் மாத்திரமே பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் TVET துறை பங்குதாரர்களின் ஆலோசனையுடன் செயற்திட்டத்தால் இனங்காணப்பட்ட 157 மரபுசாரா துறை கற்கைநெறிகள் காணப்பட்டன, ஒவ்வொருவருக்கும் சமமான வாய்ப்புக்களை வழங்கும் மேலே குறிப்பிட்ட கற்கைநெறிகளின் அடிப்படையில் அனைத்து தெரிவுகளும் மேற்கொள்ளப்பட்டன. ADB ஆல் அங்கீகரிக்கப்பட்ட குறித்த கற்கைநெறிகளின் அதே பெறுமதி சங்கிலியின் கீழ் சில வணிகங்கள் உள்ளன. எனவே அனைத்து மானியங்களும் செயற்திட்ட | செயற்திட்ட இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நோக்கெல்லையின் கீழ் தகுதியான வணிகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(3) **வெளியீடு 03**

பாரம்பரியமற்ற மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் கற்கைநெறிகளைப் பின்பற்றும் 700 பெண்களுக்கும், அந்தத் துறைகளில் பணிபுரியும் 600 பெண்களின் ஆரம்பத்தில் உள்ள இலக்கைக் குறைத்து 150 பெண்களுக்கும் ஊக்குவிப்பு தொகையை வழங்குவதற்கும், இந்த வெளியீட்டின் கீழ் 1000 மாணவிகளுக்கு வழிகாட்டல் மற்றும் தொழில் ஆலோசனையை வழங்குவதற்கும் பட்டியலிடப்பட்டது. எனவே, ஐ.அ.டொலர் 855,000 தொகை ஒதுக்கப்பட்டு, பின்னர் அது முதலாவது மற்றும் இரண்டாவது நீடிப்புக்களில் 84 சதவீதத்தால் ஐ.அ.டொலர் 135,305 வரை குறைக்கப்பட்டது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உப-செயற்பாடு 3.3.1 இன் கீழ் பாரம்பரியமற்ற மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் கற்கைநெறிகளைப் பின்பற்றும் 700 மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையை வழங்குவதே நோக்கமாக உள்ள போதிலும் 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் 513 மாணவர்களுக்கு மாத்திரமே ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது.

செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியான 2023 யூன் அளவில் செயற்திட்டம் இந்த 700 எண்ணிக்கையை அடைந்திருந்தது.

இந்த 513 எண்ணிக்கையும் கீழே உள்ள சிக்கல்களை எதிர்கொள்ளும் போது செயற்திட்டத்தால் அடைந்துகொள்ளப்பட்டது.

இந்த ஊக்குவிப்புத்தொகை மாணவிகளுக்கு மாத்திரமே வழங்கப்படுகிறதுடன் அவர்களின் 80% வருகை கட்டாயமானதாகும். இதன் காரணமாக சிலருக்கு நலன்கள் குறைவடைந்துள்ளன. மேலும் அரசாங்கம் வழங்கும் நலன்களை பெறாதவர்களுக்கு மாத்திரமே செயற்திட்ட நலன்கள் வழங்கப்பட்டன.

TVET துறையின் பங்கேற்பு ஒப்பீட்டளவில் குறைவாக உள்ள மேல் மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட 15 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மாத்திரமே நலன்கள் வழங்கப்படுகின்றன.

செயற்திட்டத்தின் மீதமுள்ள காலப்பகுதியினுள் இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) 3.4.1 இன் கீழ் மரபுசாரா மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் பணிபுரியும் 150

3.4.1 செயற்திட்டம் தொடங்கும் போது இந்த 600 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும்

மீதமுள்ள செயற்திட்ட

| | | | |
|---|---|---|---|
| | பெண்களுக்கு ஊக்குவிப்புத்தொகையை வழங்குவதே திருத்தப்பட்ட இலக்காக உள்ள போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் பணியிடத்தில் பயிற்சிக்காக 42 பேர் மற்றும் வேலை வாய்ப்புக்காக 77 பேர் உட்பட 119 பெண்களுக்கு மாத்திரமே ஊக்குவிப்புத்தொகை வழங்கப்பட்டது. | பல்வேறு பிரச்சனைகள் காரணமாக ADB உம் இதில் கவனம் செலுத்தி ஒதுக்கப்பட்ட 600 ஒதுக்கீட்டை 150 வரை குறைத்து, வெளியீடு 05 இற்காக பாதீடு மீண்டும் ஒதுக்கப்பட்டது. தற்போது இந்த 600 என்ற இலக்கு 150 வரை மாற்றப்பட்டுள்ளது. | காலப்பகுதியினுள் திருத்தப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | முக்கியமாக 2021 இல் தெரு நாடக ஆவணப்படுத்தல் நடவடிக்கைக்காக ரூபா 649,500 தொகையும் SSDP இன் செயற்பாடுகளுக்காக ஸ்தாபிக்கப்பட்ட திறன் துறை பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் 2022 சனவரி 04 இல் நடைபெற்ற புத்திசாலித்தனமான பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 4 மில்லியனுமாக 3.5.1 இன் கீழ் 2022 திசெம்பர் 31 வரை ரூபா 4.70 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 23,391 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனவே, 2022 வரை ஏற்பட்ட மேற்படி செலவினத்தினுள் 3.5.1 இன் கீழ் 1000 இற்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு வழிகாட்டல் மற்றும் தொழில் ஆலோசனைகளை வழங்குவதற்கான நோக்கத்தை அடைந்துகொள்வதை கணக்காய்வின் போது நிராகரிக்க முடியாது. | செயற்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 962 இளைஞர் மாணவர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில், ஏறத்தாழ 40 சிறந்த தொழில்முனைவோர் சிறிய SMEs இற்கு முன்மாதிரியாக பங்கேற்றுள்ளனர். இந்த 40 SMEs உம் பாரம்பரியமற்ற துறையைச் சேர்ந்தவையாகும். மேலும் அவர்கள் தங்கள் வணிகங்களை சிறந்த முறையில் வளர்த்துள்ளனர்.<br><br>இந்நிகழ்வு 14 மாவட்டங்களுக்கு மட்டுமின்றி நாடு முழுவதும் கண் திறக்கும் வகையில் அமைந்தது. இந்த பெண் தொழில்முனைவோர் வருங்கால பெண் தொழில்முனைவோருக்கு முன்மாதிரியாக கருதப்பட்டு பாரம்பரியமற்ற துறையில் சிறப்பு கவனம் செலுத்தினர்.<br><br>இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இளைஞர் பெண் விழிப்புணர்விற்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த செயற்திட்டத்திற்கும் பெரும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.<br><br>சிறந்த பெண் தொழில்முனைவோர் தவிர கீழே உள்ள பகுதியிலிருந்தும் பங்கேற்பு காணப்படுகிறது.<br><br>1. தனியார் துறை கம்பனிகள்<br>2. TVET நிறுவனங்களின் பிரிவுத் தலைவர்கள்<br><br>சில TVET நிறுவனங்களின் அதிபர்கள் மற்றும் மாணவர்கள். | உப நடவடிக்கையின் நோக்கம் அடைந்து கொள்ளப்பட வேண்டும். |
| (4) | **<u>வெளியீடு 04</u>**<br>பாலினத்தை உள்ளடக்கிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும், தனியார் துறையில் சாதகமான | | |

பணிச்சூழல் நடைமுறையை உருவாக்குவதற்கும், தனியார் துறை தொழில்தருநர்களுக்கு ஆதரவை வழங்கும் நோக்கத்திற்காக ஐ.அ.டொலர் 267,706 தொகை ஒதுக்கப்பட்டதுடன் 20 தொழில்தருநர்களுக்கு ஆதரவளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதில் 10 தொழில்தருநர்களுக்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 16.33 மில்லியன் மீள்நிரப்பு செய்யப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் உள்ள ஒரு கம்பனியுடன் பாரம்பரியமற்ற தொழிலாக அலங்கார மீன்களை வளர்க்கும் செயற்திட்டத்திற்காக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டு ரூபா 1.91 மில்லியன் தொகையை வழங்குவதற்கு இணங்கப்பட்டது. கழிவறைத் தொகுதிகளை நிர்மாணித்து 06 பெண்களுக்கு புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | உறுதிச்சீட்டில் உள்ள தகவலின் பிரகாரம் தொடர்புடைய விலைவிகிதங்கள் மற்றும் அளவுகளை உருப்படிகளாகக் காட்டும் அளவிடைப்பட்டியல் (BOQ) காணப்படவில்லை மேலும் மானியம் வழங்குபவர் கழிவறை தொகுதிகளின் கேள்விகளை அதன் அளவை (நீளம் x அகலம்) மாத்திரமே குறிப்பிட்டு கோரியிருந்ததுடன் ஒப்பந்தத்தை குறைந்த கேள்விதாரரிடம் ஒப்படைத்தார். BOQ ஐத் தயாரிக்கும் ஆலோசகரின் திகதி, கையொப்பம் மற்றும் முத்திரை இல்லாததால் கணக்காய்வு ஐயவினாவுடன் சமர்ப்பிக்கப்பட்ட புதிய BOQ ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணமாக காணப்படவில்லை. | நிர்மாணத்திற்கான அடிப்படையாக டி ஹோம்ஸ் என்ற ஆலோசனை நிறுவனத்திடம் இருந்து மானியதாரர் BOQ ஐ எடுத்திருந்தார். டி ஹோம்ஸ் தொடர்பு விபரங்கள் அட்டைப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்கள் தேவைப்படாத ஒரு நிறுவன தனிப்பட்ட கையொப்பமாக சமர்ப்பித்ததால் டி ஹோம்ஸ் BOQ அடிப்படையில், மானியதாரர் கூறுவிலைகளை மதிப்பீடு செய்துள்ளார். கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் தொடர்புடைய அனைத்து ஆதார ஆவணங்களும் உள்ளன. | உப மானியம் வழங்கும் நடைமுறைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | மைல்கல்லின் சரிபார்ப்பு வடிவத்தின் பிரகாரம் 2022 மே 04 | மாகாண ஒருங்கிணைப்பாளர் தளத்தை பௌதீக ரீதியாக மதிப்பாய்வு | சரிபார்ப்பு நடைமுறைகளை |

| | | | |
|---|---|---|---|
| | இல் மானியதாரர் செய்த வேலையை வடமேல் மாகாண ஒருங்கிணைப்பாளர் பௌதீக ரீதியாக சரிபார்த்திருந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் கடமையை நிரூபிப்பதற்கு தொடர்புடைய விலைப்பட்டியல்களில் எழுத்துமூல சான்று, அறிக்கைகள் அல்லது குறிப்பு எதுவும் காணப்படாதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | செய்திருந்தார், அவ்வாறு செய்யும் போது அவர் கொழும்பு செயற்திட்ட அலுவலகத்துடன் ஒன்லைனில் ஒருங்கிணைத்தார். தளத்தில் தனியான குறிப்பு இருக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் மைல்கல் சரிபார்ப்பு அறிக்கையானது பயன்படுத்தப்பட்ட ஆவணம்/ வடிவமைப்பு ஆகும். இது கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. | முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஓய்வு அறைகள், நவீன கழிவறை போன்ற வசதிகளுடன் கூடிய வசதியான பணியிடத்தை உருவாக்குவதற்கு ஊவா மாகாணத்தின் பிபில பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு தனியார் கம்பனிக்கு இந்த செயற்திட்டம் ரூபா 1.83 மில்லியன் தொகையை வழங்கியிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | உறுதிச்சீட்டில் உள்ள தகவல்களின் பிரகாரம் ரூபா 3.45 மில்லியன் தொகையான ஒரே ஒரு அளவிடை விலைப்பட்டியல் 2022 மார்ச் 05 இல் தனியார் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரால் தயாரிக்கப்பட்டிருந்தது. அதாவது 2022 பெப்ரவரி 15 மற்றும் 2022 மார்ச் 02 இல் முறையே அத்திவாரமிடுதல் மற்றும் சுவர்கள் நிர்மாணிப்பதற்கான விலைப்பட்டியல்களை சமர்ப்பித்த பின்னரே ஆகும். எனவே, நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட்ட பின்னர் BOQ தயாரிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கட்டிட நிர்மாணத்திற்கான மதிப்பீட்டுத் திட்டம் முதலில் 2021.08.06 இல் தயாரிக்கப்பட்டது. அதன் பின்னர் நிர்மாணம் தொடங்கப்பட்டதுடன் மானியதாரர் மேலதிக நிதி கோரிய நிர்மாணப் பணியின் தரத்தை சரிபார்ப்பதற்கு தனியான தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கை பெறப்பட்டது.<br><br>ஆனால் நாட்டின் பொருளாதார பணவீக்கத்தால், நிர்மாணப் பொருட்களின் விலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. கட்டிடத் திட்டத்திற்கு அரசாங்கத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் அங்கீகாரம் அளித்தனர். முன்பு சமர்ப்பிக்கப்பட்ட கட்டிடத் திட்டத்தின் அடிப்படையில் நிர்மாணங்களைத் தொடர்வதற்கும் பின்னர் அவர்கள் கிரய மாற்றத்திற்குப் பின்னர் மற்றொரு BOQ ஐச் சமர்ப்பித்துள்ளனர். கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுடன் இரண்டும் இணைக்கப்பட்டுள்ளது. | உப மானியம் வழங்கும் நடைமுறைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | கிடைக்கப்பெற்ற ஆவணத்தின் பிரகாரம் மேற்படி மதிப்பீடுகளைத் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒக்ஸ்பாமில் நிறுவனம் அந்த நேரத்தில் | பணி சான்றிதழ் நடைமுறைகளை |

| | | | |
|---|---|---|---|
| | தயாரித்த தனியார் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒப்பந்ததாரர் தனது உத்தியோகபூர்வ முத்திரை மற்றும் கையொப்பத்தை மாத்திரம் பயன்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத் தலைவரைக் குறிப்பிடாமல் செய்யப்பட்ட பணியை சான்றளித்திருந்தார். தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பணிச் சான்றிதழின் அடிப்படையில் ஒப்பந்ததாரர் விலைப்பட்டியல்களை சமர்ப்பித்துள்ளார். மேலும் செயற்திட்டம் அந்த விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளுகிறது. எனவே, கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் வேலைகளை சான்றுபடுத்தும் முறையை செயற்திட்டம் அறிமுகப்படுத்தியிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தை முகாமை செய்கிறது என உரையாற்றினார். TO இற்கு சரியான நபர் யார் என்று தெரியவில்லை, ஆனால் நிறுவனத்திற்கு உரையாற்றும் போது தானாகவே தலைவரைக் குறிப்பிட்டு பின்னர் அது தொடர்புடைய செயற்திட்ட முகாமைத்துவ ஆளணியினரிற்கு அனுப்பப்பட்டது.<br><br>ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்படும் பணியை உறுதிப்படுத்திய தொடர்புடைய தொழில்நுட்ப திறன் கொண்ட TO இன் அறிக்கை அல்லது குறிப்பு நிலையான நடைமுறைகளுடன் இணங்கியது. | முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கட்டிட நிர்மாணப் பணியகத்தால் வருடாந்தம் வழங்கப்படும் விலைவிகிதங்கள் மற்றும் அளவிடைகளின் பிரகாரம் தொடர்புடைய மானியதாரர் வழங்கிய நிர்மாண மதிப்பீடுகள் யதார்த்தமானவையா என்பதை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மதிப்பீடு செய்திருக்காதமை மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருக்காதமை போன்ற மேற்படி நிர்மாணங்களின் பொதுவான பிரச்சனைகளாக அவதானிக்கப்பட்டன. | செயற்திட்ட வழிகாட்டல்களின் (ADB வழங்கிய வழிகாட்டல்கள் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்கள்) கீழ் அத்தகைய சரிபார்ப்புக்கள் தேவைப்படவில்லை. | நிர்மாண நடைமுறைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் மானியதாரர் தொடர்புடைய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 3 கூறுவிலைகளை கோர வேண்டும். எனினும், ஒரு தனியார் கம்பனி இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ஒரே ஒரு கூறுவிலையை மாத்திரமே கோரி ஒரு வழங்குநரை தெரிவுசெய்வது தொடர்பான நியாயப்படுத்தலிற்காக செயற்திட்டத்திற்கு ஒரு கடிதத்தை 2022 நவம்பர் 09 இல் சமர்ப்பித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த தேவையான இயந்திரம் இரண்டு இலங்கை கம்பனிகளால் மாத்திரமே உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் இது தேவையான உற்பத்திக்கான தையல் இயந்திரமொன்றாகும். எனவே, இந்த இரண்டைத் தவிர ஒரே மாதிரியான உற்பத்தி கூறுவிலைகளை பெற்றுக்கொள்வதற்கு வேறு வழி எதுவும் காணப்படவில்லை. கிடைக்கக்கூடிய கூறுவிலைகளின் அடிப்படையில் குறைந்த விலைக்குரிய கேள்விதாரர் தெரிவுசெய்யப்பட்டார். | பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதன் பின்னர் 2022 திசெம்பர் 31 இல் நியாயப்படுத்தப்படும் உண்மைகளின் அடிப்படையில் ரூபா 2.5 மில்லியன் மொத்த இணங்கப்பட்ட தொகையை செலுத்துவதற்கு செயற்திட்டம் செலுத்தியிருந்தது. | | |
| (5) | **<u>வெளியீடு 5</u>**<br>40 தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் ஒன்லைன் கற்றல் தளத்தை உருவாக்குவதற்கு ஐ.அ.டொலர் 884,000 ஒதுக்கப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டிற்கு ஐ.அ.டொலர் 225,500 ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த முடிவின் கீழ் பணிகள் 2022 இறுதி வரை தொடங்கப்படவில்லை. மேலும் ஐ.அ.டொலர் 143.90 இற்குச் சமமான ரூபா 52,261 தொகையான செப்தெம்பர், ஒக்தோபர், நவம்பர் மேலதிக நேர செலவினங்கள் மற்றும் உபசரணை செலவினங்கள் குறியீட்டு இலக்கம் 1500 இன் கீழ் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | ஒக்ஸ்பாம் காலப்பகுதியின் போது நிர்வாகம் மற்றும் செயற்பாட்டுக் கிரயத்திற்காக ஒக்ஸ்பாமில் இருந்து தனியான பாதீட்டு ஒதுக்கீடு இருந்தது. ஆனால் செயற்திட்டம் அமைச்சிற்கு மாற்றப்பட்டதும் செயற்பாட்டு மற்றும் நிர்வாக பாதீட்டிற்கு அத்தகைய பாதீடு காணப்படவில்லை. எனவே ADB ஒவ்வொரு வெளியீட்டிலிருந்தும் நிதியைப் பொருத்தத்தின் அடிப்படையில் செயற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவினங்களுக்குப் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தியது.<br><br>இந்த உபசரணை மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு வெளியீடு 05 உடன் தொடர்புடையதாக இருப்பதால், இந்த வெளியீடு தொடர்பான கிரயம் சேர்க்கப்பட்டது. | வெளியீட்டின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (6) | **<u>ஆலோசனை சேவைகள்</u>** | | |
| (அ) | ஐ.அ.டொலர் 471,987 திருத்தப்பட்ட ஒதுக்கீட்டில் ஐ.அ.டொலர் 408,217 அல்லது 86 சதவீத தொகை செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பிற்காக 2022 ஆகஸ்ட் 31 வரை செலவிடப்பட்டிருந்தது. எனினும், ஐ.அ.டொலர் 2,484,112 ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 179 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 657,738.19 மாத்திரமே 5 வெளியீடு தொடர்பான நடவடிக்கைகளுக்காக மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. இது 26 சதவீத மிகக் குறைந்த செயலாற்றல் மட்டமாக இருந்தது. ஆலோசனை நிறுவனம் உரிய ஆலோசனைக் கட்டணத்தை கால அடிப்படையில் பெற்றிருந்த போதிலும் அவர்களின் குறிப்பு விதிமுறைகளில் (TOR) குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் குறித்த காலத்திற்குள் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. மேலும், 40 இற்கும் | ADB அங்கீகரித்த மற்றும் இணங்கிய விலைவிகிதத்தின் பிரகாரம் செயற்திட்ட ஆலோசனைக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு சில உறுப்பினர்களை மாத்திரமே செயற்திட்டம் கொண்டிருந்தது. செயற்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்ப்படுத்துவதற்கு செயற்திட்ட பதவியணியினர் தொடர்ந்து கிடைப்பது மிகவும் முக்கியமனதாகும்.<br><br>இந்த செயற்திட்டத்தில், மானியம் அல்லது நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகளை விடுவிப்பதற்கு முன்னர் பல அடிப்படை வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது.<br><br>மேலும் தாக்கல் செய்யப்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் பெரும்பாலானவை | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்பட்ட பட்டியலிடப்பட்ட பணிகள் செயற்திட்டத்தில் இருந்து வெளியேறும் ஆலோசகரால் தொடங்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. எனினும், சம்பந்தப்பட்ட ஆலோசனை நிறுவனத்துடன் எந்த கலந்துரையாடலும் காணப்படாததுடன் நீடிக்கப்பட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வதற்கு எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. மேலும் 5 வெளியீட்டின் ஒதுக்கீட்டிலிருந்து ஐ.அ.டொலர் 34,036 மாற்றப்பட வேண்டியிருந்தது. மேலும், முன்னைய ஆலோசனையாளரின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்கு 2022 திசெம்பர் 31 வரையிலான 04 மாதங்களுக்கான ஆலோசனைக் கட்டணமாக 09 ஊழியர்களுக்கு ஐ.அ.டொலர் 25,764 இற்குச் சமமான ரூபா 9.3 மில்லியன் செயற்திட்டத்திற்கு மேலதிகமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | செயற்திட்ட பதவியணியினரால் மேற்கொள்ளப்படுகின்றன. செயற்திட்டக் குழு இதனைச் செய்வதால் செலவிடப்பட்ட கிரயம் மிகக் குறைவாக உள்ள போதிலும் பாதீடு குறைவாக செலவிடப்பட்ட போதிலும் பல நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.<br><br>உதாரணம்: மானியத்தை வழங்கும் நிலைக்கு பயனாளியை கொண்டு வருவதற்கு பொதுவாக 6 மாதங்கள் எடுக்கின்றது. ஏனெனில் செயற்திட்டக் குழு செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் நிலையை மேம்படுத்த வேண்டும்.<br>நிதி மானியமாக விடுவிக்கப்பட்டதும் ஏனைய செயற்பாடுகளைக் காட்டாமல் பாதீடு மாத்திரமே காட்டுகிறது.<br><br>பதவியணியினரின் பாதீட்டுடன் ஒப்பிடும்போது குறைவான செயற்திட்ட பாதீட்டுக்காக இதுவே காரணமாகும். ஆனால் செயற்திட்டத்தின் இறுதியளவில், செயற்திட்டம் அனைத்து நிகழ்ச்சித்திட்ட பாதீட்டையும் செலவிட்டிருந்தது.<br><br>ஆலோசனைக் கட்டணங்கள் தொடர்பான இந்த ADB அங்கீகாரம் அனைத்தும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | தொடக்க அறிக்கை, ஆண்டறிக்கை மற்றும் ISSC இற்கான 5 ஆண்டுகளிற்கான மூலோபாயத் திட்டங்களின் மென் பிரதி தவிர, உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள குறிப்பு விதிமுறைகளின் (TOR) மூடுதல் (D) இன் பிரகாரம் ஆலோசனை நிறுவனத்தால் வழங்கப்பட வேண்டிய முக்கிய முக்கிய வழங்கக்கூடியவைகளில் ஏனைய அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான அனைத்து ஆவணங்களும் மின்னஞ்சல்கள் மூலம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கோவைகள் கனமானவையாகும். மேலும் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் அவற்றை மென்பிரதிகளாக ஏற்றுக்கொள்வதற்கு இணங்கியதால் இவை கணக்காய்வாளர்களுக்கு மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்பட்டன. | TOR இன் பிரகாரம் உரிய காலத்தில் முக்கிய வழங்கக்கூடியவைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் இலங்கை தொழிலாளர் படை புள்ளிவிபரங்களின் காலாண்டு அறிக்கையின் பிரகாரம் 2018 இல் 33.6 சதவீதமான பெண் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 2022 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் 31.6 வீதமாகக் | செயற்திட்டத்தின் நோக்கெல்லை மற்றும் செயற்திட்ட ஆவணத்தின் பிரகாரம் இந்த செயற்திட்டம் 16 முதல் 40 வயதுகளுக்கிடைப்பட்ட மரபுசாரா துறை TVET மாணவர்களை மாத்திரமே கருத்தில் கொண்டதுடன் 70% பெண்களாவர். | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| குறைந்துள்ளது. மேலும், அதிக வேலையின்மை விகிதம் இலங்கையில் 15-24 வயதுக்குட்பட்டவர்கள் அதாவது 29.4 சதவீதம் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் இலங்கைப் பொருளாதாரத்தில் பெண்களின் தொழிலாளர் பங்கேற்பை 50 சதவீதமாக அதிகரிக்கும் நோக்கில் வெளிநாட்டு மானியங்கள் மூலம் நிதியிடப்பட்ட இவ்வாறான செயற்திட்டங்கள் இலங்கையில் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த முடிவுகள் அடைந்து கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | எனவே இச்செயற்திட்டம் கொடுக்கப்பட்ட நோக்கெல்லையின் பிரகாரம் அமுல்ப்படுத்தப்பட்டு DMF இலக்கை வெற்றிகரமாக அடைந்துள்ளது.<br><br>தேசிய குறிகாட்டிகளுடன் ஒப்பிடும் போது செயற்திட்டத்தின் நோக்கெல்லை மிகவும் குறைவாக இருப்பதால் இந்த செயற்திட்டத்தை தேசிய குறிகாட்டிகளுடன் ஒப்பிட முடியாது. மேலும் செயற்திட்டம் இந்த நடவடிக்கைகளை அமுல்ப்படுத்தியதுடன் செயற்திட்டத்தின் தேவைப்பாட்டிற்கேற்ப இந்த எண்ணிக்கைகளை அடைந்தது. |

**3.2 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறப்பட்ட ஐ.அ.டொலர் 3 மில்லியன் மானியத் தொகையில், 40 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 321.71 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.21 மில்லியன் தொகை மாத்திரமே 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடங்கப்பட்டு 04 ஆண்டுகள் கடந்த பின்னர் பயன்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 40 சதவீதத்தை பயன்படுத்துவதற்கு 04 வருடங்களும், 60 சதவீதத்தை பயன்படுத்துவதற்கு 06 மாதங்களும் எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், கூறு A இற்காக திருத்தப்பட்ட பாதீட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 2.48 மில்லியன் ஒதுக்கீட்டில், 31 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தகின்ற ரூபா 220,989,614 இற்கு சமமான ஐ.அ.டொலர் 773,353 தொகை மாத்திரமே 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. | உயிர்த்த ஞாயிறு தாக்குதல், இரண்டு வருட கொவிட் தொற்றுநோய் மற்றும் நாடு பூட்டுதல், எரிபொருள், மின்சாரம் மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைப் பற்றாக்குறை உள்ளடங்கலான நிதி நெருக்கடி உள்ளிட்ட 4 ஆண்டு செயற்திட்டக் காலப்பகுதியில் இந்த செயற்திட்டம் வேறுபட்ட மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளை எதிர்கொண்டிருந்தது. எனவே சமூகம் அடிப்படைத் தேவைகளுக்குப் பின்னால் ஓடிக்கொண்டிருக்கும் போது இந்த செயற்திட்டம் சில அமுல்ப்படுத்தும் நடவடிக்கைகளை இடைநிறுத்த வேண்டியிருந்தது.<br><br>இந்த காலப்பகுதியில் ADB மற்றும் அமைச்சு செயற்திட்ட செயற்பாடுகளில் சிலவற்றை மாற்றி செயற்திட்டத்திற்குள் புதுமைகளை மேம்படுத்துவதற்கு மிகவும் புத்திசாலித்தனமான முடிவுகளை எடுத்திருந்தன. இது நெருக்கடியிலிருந்து இனங்காணப்பட்ட சிலவற்றை நிவர்த்தி செய்ய உதவுகிறது.<br><br>ஆனால் 2023 யூன் 30 அளவில் | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நிதியைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயற்திட்டம் அனைத்து செயற்திட்ட நிதிகளையும் செலவிட்டு இணங்கப்பட்டவாறு அனைத்து DMF ஐயும் பூர்த்தி செய்திருந்தது. | |
| (ஆ) | மானிய நிதித் தகவல் முறைமையின் தகவலின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 1.83 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தின் பட்டியலிடப்பட்ட செயற்பாடுகளை அமுல்ப்படுத்தாததன் காரணமாக ஐ.அ.டொலர் 622,207 தொகை விசேட (டொலர்) கணக்கு மற்றும் உரிமம் பெற்ற வணிக வங்கியில் விளைவற்றிருந்தது. | செயற்திட்டம் அமைச்சிற்கு மாற்றப்பட்ட பின்னர் செயற்திட்டத்திற்கான டொலர் வங்கிக் கணக்கு மற்றும் இலங்கை ரூபா கணக்கைத் திறப்பதில் தாமதம் ஏற்பட்டதால் இந்தப் பணம் கணக்கில் காணப்பட்டது. இந்த பணம் 2023 ஜனவரி மாதத்திற்குள் செலவிடப்பட்டது. | முகாமைத்துவத்தால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தை அமுலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 பொதுத் திறைசேரி புத்தகங்களுடனான இணக்கம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2019 யூலை 25 ஆம் திகதிய எஸ்சீ&பிஎம்யூ/மானியம்/19 மற்றும் 2020 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய எஸ்சீ&பிஎம்யூ/மானியம்/20 ஆம் இலக்க வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் சுற்றறிக்கைகள் வெளிநாட்டு மானியங்களின் பெறுவனவு மற்றும் கணக்கீட்டை எவ்வாறு கையாள்வது என்பதை வலியுறுத்திய போதிலும் பொது திறைசேரியின் புத்தகங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து செயற்திட்டத்தால் ரூபா 548.04 மில்லியன் மானியம் பெறப்பட்டமைக்கான எந்தப் பதிவும் காணப்படாதமை அவதானிக்கப்பட்டது. | ADB இடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் ADB வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதிகளின் அனைத்து தகவல்களையும் பகிர்ந்துள்ளது. ஏனைய அனைத்து உள்ளூர் செயற்திட்டங்களுக்கும் ADB பின்பற்றிய அதே செயன்முறை இதுவாகும்.<br><br>ADB இன் பிரகாரம் செயற்திட்டத்திற்காக விடுவிக்கப்பட்ட அனைத்து நிதிகளும் அரசாங்கத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 புறம்பான செயற்பாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ADB குறியீடு 901 இன் கீழ் ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிக்காக ரூபா 1.92 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மேலே உள்ள குறியீட்டில் சேர்க்கப்பட்டுள்ள முன்னோட்ட ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சியின் கீழ் வராத ஐ.அ.டொலர் 4,150 இற்குச் சமமான ரூபா 1.41 மில்லியன் செலவினம் அவதானிக்கப்பட்டது. | ஒக்ஸ்பாம் காலப்பகுதியின் போது நிர்வாகம் மற்றும் செயற்பாட்டு கிரயத்திற்காக ஒக்ஸ்பாமில் இருந்து தனியான பாதீட்டு ஒதுக்கீடு காணப்பட்டது. ஆனால் செயற்திட்டம் அமைச்சிற்கு மாற்றப்பட்டதும் செயற்பாட்டு மற்றும் நிர்வாக பாதீட்டிற்கு அத்தகைய பாதீடு காணப்படவில்லை. எனவே ADB ஒவ்வொரு வெளியீட்டிலிருந்தும் நிதியைப் பொருத்தத்தின் அடிப்படையில் செயற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவினங்களுக்குப் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தியது.<br><br>அதற்கேற்ப இந்த பாதீட்டு வரிசைக்கு இந்த நிர்வாக மற்றும் செயற்பாட்டுக் கிரயம் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு ADB அங்கீகாரம் அளித்துள்ளது. | ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 47,800 தொகையான வாகன பற்றரியின் பெறுமதி 1.4.3 உப நடவடிக்கையின் கீழ் 2701 செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளின் குறியீட்டின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து மீள்நிரப்புச் செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டம் அமைச்சிற்கு மாற்றப்பட்ட போது PLAN சர்வதேசத்திடம் இருந்த வாகனத்தை Plan சர்வதேசம் அன்பளிப்பு செய்தது. இந்த வாகனம் அமைச்சின் உரிமைத்துவத்தின் கீழ் வைத்து செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டது.<br><br>வாகனப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புக் கிரயத்தை இந்த செயற்திட்டம் மேவுகை செய்ய வேண்டியதால் இந்த பற்றரி செலவினங்கள் செயலமர்வு பாதீட்டின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. ஏனெனில் வாகனம் முக்கியமாக செயலமர்வு ஏற்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது. | ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 உள்ளகக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| உடன்படிக்கையின் அமலாக்கல் ஏற்பாட்டு அட்டவணை 3 இன் பிரகாரம் MSDVT இன் செயலாளரின் தலைமையில் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் தொழில்துறை சபை உறுப்பினர்களைக் கொண்ட செயற்திட்ட வழிகாட்டல் குழு மேற்பார்வை அமைப்பாக நிறுவப்படவில்லை. மேலும் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் நிறைவேற்றல் முகவரின் உள்ளக கணக்காய்வுப் பிரிவால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இச் செயற்திட்டம் அமைச்சின் SSDP அலகின் மேற்பார்வையின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டு வருகிறது.<br><br>அனைத்து செயற்திட்ட நடவடிக்கைகள் மற்றும் நிதி நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் SSDP இன் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நிதிக் குழுவின் சார்பில் SSDP இன் மேலதிக செயலாளரால் நேரடியாக கண்காணிக்கப்பட்டது.<br><br>அமைச்சின் நிதிப் பிரிவு செயற்திட்ட ஆவணங்களைத் தொடர்ந்து கண்காணித்து மதிப்பாய்வு செய்ததுடன் நன்கொடையாளர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அறிக்கை அளித்திருந்தது. | நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் நிறைவேற்று முகவரின் உள்ளகக் கணக்காய்வு மூலம் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய ஆவணத்தை பொருத்துவதில் இணங்கப்பட்ட ஏற்பாட்டிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |